## 1962-ம் ஆண்டு வரையிலான சீன - இந்தியா உறவின் பல்வேறு நிலை

கி.பி. ஒன்றாம் நூற்றாண்டு மிங்கி பேரரசர் புத்த சமயத்தை அறிமுகம் செய்தார்.

கசபர், கபதர்மர் சீனா சென்ற முதல் புத்த துறவிகள் ஆவர். காஞ்சிபுரம் போதி தர்மர் 6-ம் நூற்றாண்டில் மன்னர் ஷாவின் மடாலயத்தில் தங்கி சீனாவின் சாம்புத்த சமயப்பிரிவை நிறுவி, ஒன்பது ஆண்டுகள் தங்கியிருந்தார்.

7-ம் நூற்றாண்டில் சீனத்தூதர் யுவான்சுவாங் இந்தியா வந்தார். இது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாக அறியப்படுகிறது. பின்னர் பிரிட்டிஷார் ஆட்சி செய்தபோது பிணக்குகள் ஆரம்பமாகியது. ரஷ்யாவின் ஆக்கிரமிப்பிலிருந்து சீனாவை விடுவிக்க பிரிட்டிஷார் நடவடிக்கை மேற்கொண்டனர்.

சீனா - இந்தியா இடைப்படு நட்பு நாடாக திபெத் இருந்து வந்தது. 1913ம் ஆண்டு சீனா, திபெத், பிரிட்டிஷ் பிரதிநிதிகள் சிம்லாவில் கூடி இந்தியா, திபெத் எல்லை உருவாக்கப்பட்டது. எல்லைக் கோட்டிற்கு அந்த மாநாட்டின் தலைவர் மெக்மோகன் பெயர் வைக்கப்பட்டது. என்றபோதிலும் அந்த ஒப்பந்தத்தில் சீனப் பிரதிநிதிகள் கையெழுத்திடவில்லை.

1920-ம் ஆண்டு மகாத்மா காந்தியின் ஒத்துழையாமை இயக்கத்திற்கு சீனத்தலைவர் சன்யாட்சென் பேராதரவு தெரிவித்தமார்.

ஜப்பானுக்கு எதிரான சீனப்போராட்டத்திற்கு இந்தியா ஆதரவு தெரிவித்தது.

1947-ஆம் ஆண்டு இந்தியாவும் 1949-ம் ஆண்டு சீனாவும் சுதந்திரம் அடைந்தன.

இந்தியா ஜனநாயத்தையும், சீனா கம்யூனிசத்தையும் பிற்பற்றின. எனவே இரண்டிற்கும் இடையில் கடுமையானப் போட்டி, எதிர் எண்ணங்கள் தோன்றலாயின. இரண்டும் அதிக சனத்தொகை கொண்ட நாடுகளாக இருந்தபடியால் ஆசியாவின் பெரும் சக்திகளாக வளர்ந்த அதே சமயம் போட்டி மனப்பான்மை கடுமையாகிறது.

ஜனநாயக இந்தியாவை கம்யூனிஸ்ட் சீனா உள் மனதில் முதலில் வெறுத்து சந்தேகக் கண் கொண்டு பார்த்து வந்தது. இந்தியாவை, மேலை நாடுகளின் அடிவருடி என்ற நிலையில் சீனப்பார்வை இருந்தது. ஆசியாவின் தலைமையாக இந்திய ஆக விரும்புகிறது என சீனா விரோதமாகக் கருதியது.

அதேவேளை சீனாவின் ஆக்கிரமிப்புக்கொள்கை இந்தியாவிற்கு அச்சம் அளித்தது. இருப்பினும் இரண்டு நட்பு நாடுகளாக நடித்துக்கொண்டிருந்தன.

1949ம் ஆண்டு மாசேதுங் சீனக்குடியரசை நிறுவியபோது அமெரிக்கா மற்றும் சில மேற்கத்திய நாடுகள் எதிர்ப்பு தெரிவித்தபோதிலும், அங்கீகரித்த நாடுகளுள் இந்தியா முதலாவதாக விளங்கியது. அதே போல் ஐ.நா. சபையில் சீனாவை அனுமதிப்பதற்கு இந்தியா ஆதரவு அளித்தமையால் உண்மை நட்பு பாராட்டி இந்தியாவை சீனா வரவேற்கும் என நேரு நம்பினார். ஆனால் சீனா கம்யூனிஸ்ட் அல்லாத நாடுகளை எதிரியாகக் கருதியது.

1950ம் ஆண்டு திபெத் கொரிய விவகாரங்கள் உண்டாயின. இமாலய மலைக்கு வடபுறமுள்ள திபெத்தை குப்ளாய்கான் காலத்திலிருந்தே சீனா உரிமை கொண்டாடியது. திபெத் மக்கள் இதை விரும்பவில்லை. 1911ம் ஆண்டு சீனா, திபெத்தை ஆக்கிரமித்து அங்கு இராணுவ ஆட்சியை ஏற்படுத்தியது. எனினும் அடுத்த ஆண்டே இராணுவத்தை மக்கள் விரட்டி அடித்து விடுதலை அறிவித்து சுதந்திர நாடாக்கினர்.

இதற்கு முன்னர் 1949ம் ஆண்டிலிருந்து திபெத்தை இணைத்துக்கொள்ள சீனா நினைத்தபோது திபெத்தை சுதந்திர நாடாக இருக்க விரும்பிய இந்தியா அதை சீனாவிடம் தெரிவித்தது. அப்போது, தங்கள் உள்நாட்டு விவகாரத்தில் இந்தியா தலையிடுவதாக சீனா குற்றம் சாட்டியது. அத்துடன் 1950-ஆம் ஆண்டு திபெத்தில் சீனா இராணுவ ஆட்சி ஏற்படுத்தியபோது இந்தியா அதற்கு எதிர்ப்பு காட்டியது. இதை சீனா கடுமையாச் சாடியதுடன் திபெத்தை சீனாவின் ஒருபகுதி என அறிவித்தது.

இந்நிலையில் நேரு சீனாவுடன் விரோதத்தை வளர்க்க விரும்பவில் லை. எனவே திபெத் பிரச்சினை ஐ.நா. சபையில் வந்தபோது, அது சீனா - திபெத் இடையிலான இருநாட்டுப் பிரச்சினை என

இந்தியா ஒதுங்கி அதற்குத் தகுந்தவாறு பேசியது. இதற்கு திபெத் பிரச்சினையில் இந்தியா முதலில் ஒரு விதமாகவும், பின்னர் வேறு விதமாகவும் முடிவு எடுத்து தேவையில்லாமல் மூக்கை நுழைக்க பல்டி அடித்த கதையாகி சீனாவின் மன எதிர்ப்பை அதிகப் படுத்திக்கொண்டது.

வடகொரியா மற்றும் தென்கொரியா நாடுகளுக்கிடையில் 1950-ம் ஆண்டு முதல் 1953-ம் ஆண்டு வரை மூன்று ஆண்டுகள் போர் நடந்தது. இந்த போர் முடிந்து அமைதி ஏற்பட அணிசேரா நாடான இந்தியா முக்கிய முதன்மை பணியாற்றியது. இதனால் இந்தியாவிற்கு நடுநிலை நாடுகளின் தாயக மீட்பிப்பு ஆணையத் தலைவர் என்ற அந்தஸ்து வழங்கப்பட்டது.

அதன்பிறகு 1955-ம் ஆண்ட இந்தோனேசியாவின் பாண்டுங் நகரில் அணிசேரா நாடுகளால் பாண்டுங் மாநாடு நடத்தப்பட்டது. ஆசிய ஆப்பிரிக்க தலைவர்களுக்கு, சீனப்பிரதமர் சூஎன்லாய் அவர்களை இந்தியப் பிரதமர் நேரு அறிமுகம் செய்து வைத்தார். அதன் பிறகுதான் சீனா உலக நாடுகளுடன் தொடர்பு கொள்ள ஆரம்பித்தது.

1956-ம் ஆண்டு சூயஸ் கால்வாய் பிரச்சினை உருவாயிற்று. இதன் காரணமாக இங்கிலாந்து மற்றும் பிரான்ஸ் நாடுகள் எகிப்தை தாக்கத் தயாராகின. இந்தியா போன்ற நாடுகளின் முயற்சியால் அது தடுக்கப்பட்டுத் தீர்வு உண்டானது.

தென் ஆப்பிரிக்காவின் சுதந்திரத்திற்கும் இந்தியா தொடர்ந்து குரல் கொடுத்து வந்தது. இவைகளினால் உலக அரங்கில் இந்தியாவின் புகழ், வலிமை மீது சீனா பொறாமை கொண்டது. இந்தியாவை ஓரங்கட்டி அந்த இடத்திற்கு சீனா வர விரும்பியது.

இதற்காக சீனா முதலில் அண்டை நாடுகளுடன் நல்லுறவை மேம்படுத்த நடவடிக்கைகள் மேற் கொண்டது. இதற்கு மாறாக இந்தியா அண்டை நாடுகளுடனான உறவில் ஆரம்பத்தில் கோட்டை விட்டு மற்ற உலக நாடுகளுடன் உறவை உண்டாக்கிக் கொண்டிருந்தது.

இந்தியா காஷ்மீரை இணைத்துக் கொண்டதை பல நாடுகளைப் போல் சீனாவும் விரும்ப வில்லை. காஷ்மீரின் ஒரு பகுதியின் மீது சீனா கண் வைத்திருந்தது. பாகிஸ்தான், லாவோஸ், கம்போடியா ஆகிய நாடுகள் சீனாவை மிக விரும்பின.

சீனா தன் வரைபடத்தில் இந்தியப் பகுதிகளைச் சேர்த்து வெளியிட்டு வந்தது. இதற்கு இந்தியா தெரிவித்த எதிர்புகளை சீனா பொருட்படுத்தவில்லை. பாகிஸ்தான் முறையீட்டினால் காஷ்மீர் பகுதியல் ஐ.நா. சபை தீர்மானத்தின்படி மக்கள் கருத்தறியும் வாக்கெடுப்பை இந்தியா நடத்தாதினாலும் சீனா கோபம் கொண்டது. வாக்கெடுப்பு நடத்தப்பட்டால் தங்களுக்கும் காஷ்மீரில் ஒரு பகுதி கிடைக்கும் என எதிர்ப்பார்த்தது. தன்னைவிட இரண்டரை மடங்கு நிலப்பரப்பில் சிறய நாடான இந்தியா தன்னை மீறி நடப்பதை சீனா பொறுக்க இயலவில்லை.

அத்துடன் இந்தியா - ரஷ்ய உறவின் வளர்ச்சியையும் சீனாவால் ஜீரணித்துக் கொள்ள முடியவல்லை.

பலவகையான உட்பகை, பொறமையால் 1958ஆம் ஆண்டு இந்தியாவின் குர்ணாக் கோட்டையை சீனா ஆக்கிரமிப்பு செய்தது. இந்திய எல்லைக்குள் சிக்கிம், திபெத் இடையே ஆசியாவின் நெடுஞ்சாலைகளை அமைத்தது. இதனால் ஏற்பட்ட இந்திய எதிர்ப்பிற்கு, இந்திய - சீன எல்லைகள் ஒரு போதும் சரிவர நிர்ணயிக்கப்பட்டதில்லை என சீனா கூறிவிட்டது. மேலும் மெக்மோகன் எல்லைக் கோடு பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தால் உருவாக்கப்பட்டது. அது சரியல்ல என கூறியது.

அடுத்ததாக இந்தியாவுடன் சிக்கிம் இணைந்தது சீனாவுக்கு எரிச்சலைத் தந்தது.

மற்றொரு சம்பவமாக 1959-ம் ஆண்டு மார்ச் மாதம் திபெத்தில் சீனாவின் ஆக்கிரமிப்பை எதிர்த் லாசாவில் தலாய்லாமா தலைமையில் சமயம் சார்ந்த அரசு தன் சுயாட்சியை பிரகடனம் செய்தது. என்ற போதிலும் சீனா அதை விரைவில் அடக்கிவிட்டது. இச்சூழ்நிலையில் தலாய்லாமாவும் அவரது ஆதரவாளர்களும் இந்தியாவிற்குள் அடைக்கலமாக வந்தனர். அவர்களுக்கு இந்தியா அடைக்கலம் கொடுத்ததை சீனா விரும்ப வில்லை.

இப்படி பலவகை உட்பகையினால் சீனா இந்தியாவின் மீது கோபத்தைக்காட்ட ஆரம்பித்து, இந்திய - சீன எல்லையில் சீனப்படை ஊடுருவல் செய்தது.

எல்லைப்பிரச்சினை குறித்து விவாதிப்பதற்காக இந்தியாவின் அழைப்பின் பேரில் 1960ம் ஆண்ட ஏப்ரல் மாதம் சீனப் பிரதமர் இந்தியா வந்தார். ஆனால் அப்பேச்சுவார்த்தை தோல்வியிலேயே முடிந்தது. அக்சால்சென் பகுதியை இந்தியா விட்டுக்கொடுத்தால் மெக்மோகன் எல்லைக்கோட்டை சீனா ஏற்பதாகக் கூறியது. இதற்கு இந்தியா மறுத்துவிட்டது.

1960-ல் லாடாக் மற்றும் கிழக்கு எல்லைப்பகுதியில் போர் மோகம் உண்டாயிற்று. ஏப்ரல் 1961ல் சிக்கிம் பகுதிக்குள் சீனப்படைகள் நுழைந்தன. மே 1961ல் சூசல் பகுதி ஆக்கிரமிக்கப்பட்டது. ஆகஸ்டில் லடாக் பகுதியில் சீனா மூன்று சுங்கச்சாவடிகளை அமைத்தது. இதனால் வேறு வழியின்றி இந்தியாவும் துருப்புகளை எல்லைப்பகுதிக்கு அனுப்பியது.

ஜூன் 1962-ல் லடாக் வழியாக கால்வன் பள்ளத்தாக்கை சூழ்ந்து கொண்டது. காந்தி ஜெயந்தியான அக்டோபர் 2ம் தேதி கிழக்கு, மேற்கு எல்லைப்பகுதிகளில் சீனப்படைகள் பெரும் தாக்குதல் நடத்தின.

இந்திய துருப்புகள் போதிய ஆயுத பலமில்லாததினால் ஒன்றும் செய்யமுடியாமல் பின் வாங்கின. மூன்று வாரத்திற்குள் அஸ்ஸாம் சமவெளியை சீனப்படையினர் ஆக்கிரமிக்கத் தயாராயினர். ஆனால் மேற்கொண்டு சீனா போரை நடத்தவில்லை. சீனா தானாகவே 12.11.1962ல் போர் நிறுத்த அறிவிப்பை செய்தது. அதற்கு பல காரணங்கள் இருந்தன. சொல்லப்பட்டன.

இங்கிலாந்து, அமெரிக்கா போன்ற நாடுகள் இந்தியாவின் துணைக்கு வரக்கூடும் என எதிர் பார்க்கப்பட்டது. அணிசேராக் கொள்கை அணிநாடுகள் இந்தியாவின் துணைக்கு வரக்கூடும் என எதிர் பார்க்கப்பட்டது. சோவியத் யூனியன் நடுநிலைமை வகித்தது.

அணிசேராக் கொள்கை போன்ற செயல்பாடுகள் மூலம் உலக அரங்கில் இந்தியாவுக்கும் அதன் பிரதமர் நேருவுக்கும் இருந்த புகழ் மரியாதையை அழிப்பது. இந்தியாவை அவமானப்படுத்தி, பயமுறுத்தி கீழ்மைப்படுத்துவது ஆகிய காரணங்களால் இந்த எல்லைப் போரை பெயருக்காக சீனா நடத்தியதாகச் சிலர் கருதினர்.

உண்மையில் இப்போரினால் இந்தியா உலக அரங்கில் சிறிது மதிப்பிழந்து போனது இந்தியாவின் புகழ் சற்று சரிந்து போனது. ஆசிய ஆப்பிரிக்க நாடுகளின் மத்தியில் சீனா முக்கிய இடத்தைப் பெறலாயிற்று.

இந்த போரினால் இந்தியாவுக்கு விழைந்த நன்மை யாதெனில் இந்தியாவும் தன் இராணுவத்தை நவீனமாக்கி பலப்படுத்த ஆரம்பித்தது.

இவ்வகையான ஒரு நடைபெறாத போரில் கிழக்கே 200 ச.மைல் மேற்கே 15000 ச.மைல் நிலப் பரப்பையும் இந்தியா சீனாவிடம் இழந்தது.

இச்சீனப் படையெடுப்பின் பின் விளைவாக பாகிஸ்தான் தைரியம் ஓங்கி 1965ம் ஆண்டு காஷ்மீரைக் கைப்பற்றுவதற்கு இந்தியா மீது படையெடுப்பு செய்ய வைத்தது.